# பிரதான விடயங்களடங்கிய ஆவணம் (KFD)

## வாகனக் கடன்

## மேர்சன்ட் பேங்க் ஒ.ஃப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ

## (Merchant Bank of Sri Lanka & Finance PLC)

### 1. பொருள் / சேவை – வாகனக் கடன் (Auto Loan)

இந்த வசதியானது வாடிக்கையாளருக்கு மோட்டார் வாகனம் மற்றும் இருவித பயன்பாட்டு வாகனம் போன்ற தனிப்பட்ட பயன்பாட்டிற்குரிய பிரசித்தமான வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதி வசதியினை அளிப்பதனை அல்லது வாகனமொன்றைக் குத்தகைக்கு விட்டு பிற நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதி வசதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், மோட்டார் கோச், டிப்பர் வாகனங்கள், விசேட செயற்பாட்டு வாகனங்கள், லொறி, பிரைம் மூவர் போன்ற வர்த்தக வாகனங்களுக்கு இந்த வசதிகள் வழங்கப்படுவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

### 2. இதன் முக்கிய அம்சங்களும் நன்மைகளும்

அ) கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்

ஆ) குறைந்தபட்ச கடன் வழங்கும் காலம்

இ) 5 வருடங்கள் (60 மாதங்கள்) வரை மீளச் செலுத்தும் காலம்

ஈ) புதிய / பதிவுசெய்யப்படாத வாகனங்களுக்கு 6 வருட (72 மாதங்கள்) வரை வசதிகள் வழங்க முடியும்.

ஈ) விரைவான வாடிக்கையாளர் சேவை

### 3. தகைமை:

**வாடிக்கையாளர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

அ) 18 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 65 வயதிற்குக் குறைந்த இலங்கைப் பிரஜையாக இருத்தல்.

ஆ) ஏற்றுக் கொள்ளக்கூடிய / உறுதிப்படுத்தக்கூடிய மீளச் செலுத்தும் இயலுமை.

இ) தெளிவான / திருப்திகரமான கொடுகடன் அறிக்கை (திருப்திகரமான CRIB அறிக்கை)

ஈ) கடன் வசதியின் நோக்கம் வாகனமொன்று (மோட்டார் வாகனம் / இருவித பயன்பாட்டு வாகனம்) கொள்வனவு செய்தல் அல்லது விண்ணப்பதாரியின் பிற நிதித் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

### 4. வட்டி வீதங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள்

#### 4.1 வட்டி வீதம்

வட்டி வீதம், சொத்துக்களது தரம், வாடிக்கையாளரது ஆபத்துத் தன்மை மற்றும் சந்தை

நிலைமைகளை கருத்திற் கொண்டு ALCO குழுவினால் எடுக்கப்படுகின்ற தீர்மானத்தின் அடிப்படையில் அமையும். ஆகக்குறைந்த வட்டி வீதமானது வருடாந்தம் 16.00% தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

### 4.2 ஏனைய கட்டணங்கள்

#### 4.2.1 ஆவணங்களுக்கான கட்டணங்கள்

**சமூகப் பாதுகாப்பு வரி (Social Security Levy) உரித்தாகும்.**

| | |
|---|---|
| <LKR 500,000 | 5,000.00 |
| LKR 500,000 - LKR 999,999 | 10,000.00 |
| LKR 1,000,000 - LKR 1,499,999 | 12,000.00 |
| LKR 1,500,000 - LKR 1,999,999 | 15,000.00 |
| LKR 2,000,000 - LKR 2,999,999 | 20,000.00 |
| LKR 3,000,000 - LKR 4,999,999 | 30,000.00 |
| LKR 5,000,000 - LKR 9,999,999 | 40,000.00 |
| >=LKR 10,000,000 | 50,000.00 |

#### 4.2.2 கட்டணங்கள் - அசையாச் சொத்துக்கள் மீது வழங்கப்படுகின்ற கடன் வசதிகள்

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட RMV / DMT வாகனப் பதிவுக் கட்டணம்.

உரித்தாகின்ற ஏனைய கட்டணங்கள்

#### 4.2.3 கட்டணங்கள் - அசையும் சொத்துக்களை பிணையாக வைத்து வழங்கப்படுகின்ற இலகு வரைவு வசதிகளுக்கு

அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் வாகனப் பதிவுக் கட்டணம் உரித்தாகும்.

#### 4.2.4 மாதாந்த தவணைப்பணத்தைச் செலுத்தாமை அல்லது தாமதமாகச் செலுத்துதல் தொடர்பில் அறவிடப்படுகின்ற தண்ட வட்டி (இருந்தால்)

உரிய தினத்தில் தவணைப்பணம் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில், தாமதமாகும் காலத்திற்கு ஒரு மாதத்திற்கு மூன்று வீதம் (3%) மேலதிக வட்டி (Overdue interest) அறவிடப்படும்.

#### 4.2.5 பெற்றுக்கொண்ட வசதியை முதிர்ச்சிக்கு முன்னரே செலுத்துதல்.

கடன் பெற்றவரால் உரிய கடன் தொகை, உரிய காலத்திற்கு முன்னர் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில், அந்த வசதியின் மீதி வட்டிக்கு சலுகை வழங்குவது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் முழுமையான விருப்பம் மேர்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரியது.

4.2.6 பொருந்தக்கூடிய ஏனைய கட்டணங்கள்

| இலக்கம் | அறவீடுகள் / கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் | அறவீடுகள் / கட்டணம் (இல.ரூபா) |
|---|---|---|
| 1 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் | 1,000.00 |
| 2 | உறுதி மற்றும் திட்ட வரைபடங்களது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் | 750.00 |
| 3 | நிலுவைகள் இல்லையென்பதற்கான கடிதம் | 250.00 |
| 4 | வாடிக்கையாளரது மீளச் செலுத்தும் வரலாறு | 250.00 |
| 5 | அனைத்து வாகன வகைகளுக்குமான பிரதிகள் (Duplicate) கடனை இரத்துச் செய்யும் கடிதங்கள் | 2,000.00 |
| 6 | ஆட்சேபனை இல்லை என்பதற்கான கடிதம் | 1,000.00 |
| 7 | கடன் தீர்ப்பனவு கடிதங்கள் | 750.00 |
| 8 | கடன் கொடுப்பவர் கொள்வனவாளருக்கு வழங்குகின்ற காசோலைச் சிட்டை | 1,500.00 |
| 9 | காசோலை திரும்பல்களுக்கான அறவிடுகள் | 2,500.00 |
| 10 | காசோலை மீளத் திருப்பம் - கட்டளை பிறப்பித்தவர் கொடுப்பனவை நிறுத்துதல். | 5,000.00 |
| 11 | விடுவிக்கும் உறுதி (தொலைந்த) தயாரித்தல் மற்றும் கையொப்பம் இடுவதற்கான சட்டக் கட்டணம் | 7,500.00 |

**5.** வழங்கப்படக்கூடிய வாகன வகைகள் - கடன் எல்லை மற்றும் பெற்றுக்கொள்ள வேண்டிய காப்புறுதி

அ. அசையும் சொத்து – சொத்துக்கள்

ஆ. இலங்கை மத்திய வங்கி (CBSL) இனால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் பெறுமதியின் மீதான கடன் (LTV) வீதத்தை அடிப்படையாகக் கொண்டு.

இ. மோட்டார் வாகனங்கள் மற்றும் இருவித பயன்பாட்டு வாகனங்கள் (Dual Purpose Vehicles) போன்ற பிரபலமான வாகனங்களுக்கு.

**6. பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள்**

1. அனைத்து சாத்தியமான வாடிக்கையாளர்களும் அருகிலுள்ள கிளைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுப்பதோடு தங்களது தேவைப்பாடுகள் குறித்து கலந்துரையாடவும் அழைக்கப்படுகிறார்கள்.
2. கலந்துரையாடலின் பின்னர், உரிய விடயங்கள் மதிப்பீடு செய்யப்படுவதுடன், வாடிக்கையாளரது தேவைக்கேற்ப உரிய நடைமுறைகள் ஆரம்பிக்கப்படும்.
3. அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆவணத்திற்கமைய (DOA) உரிய அனுமதி பெற்றுக்கொள்ளப்படும்.

## 6.1 தேவையான ஆவணங்கள்

### 6.1.1 தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு

i. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்

ii. செல்லுபடியான சிட்டை (06 மாத காலப்பகுதிக்குள்)

iii. வழங்குனரின் சிட்டை / விலைமனு / புரோபோமா சிட்டை / விற்பனை கடிதம்

iv. வழங்கப்பட்ட பொருளுக்கான LASL மதிப்பீட்டாளரது மதிப்பீட்டு அறிக்கை (வாகனங்களுக்கு MTA உரிமைமாற்ற படிவத்துடன் வாகனத்தின் பதிவுப் புத்தகம் CR)

v. வருமான அறிக்கை (சம்பளத்தை உறுதிப்படுத்தும் கடிதம் அண்மையில் எடுக்கப்பட்ட சம்பள அறிக்கை / வங்கிக் கூற்று) / நிதிப் பாய்ச்சல் கூற்று

vi. இலங்கை கொடுகடன் பணியகத்தின் அறிக்கை (தனிப்பட்ட மற்றும் வர்த்தகம், இருந்தால்)

vii. இறுதி 6 மாதத்திற்கான வங்கிக் கூற்று (தனிப்பட்ட மற்றும் வர்த்தகம்)

viii. வியாபாரப் பதிவுச் சான்றிதழ் (பெற முடியுமெனின்)

ix. நிதிப்பாய்ச்சல்

x. வருமானத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏனைய ஆவணங்கள்

### 6.1.2 நிறுவன ரீதியான வாடிக்கையாளர்கள் - வரையறுக்கப்பட்ட கம்பனிகள் / பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகள்

i. ஒருங்கிணைக்கும் சான்றிதழ்

ii. சங்கத்தின் யாப்பு

iii. படிவங்கள் 1, 13, 15, 20.

iv. வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு / வருமான வரி (அண்மைய)

vii. பணிப்பாளர் சபை பிரேரணை

vii. கடைசி மூன்று வருடங்களின் கணக்காய்வு அறிக்கை

viii.நடப்பு ஆண்டின் முகாமைத்துவ கணக்குகள் ∴ நிதிப்பாய்ச்சல் கூற்று

ix. கடைசி 06 மாதத்திற்கான வங்கிக் கூற்றுகள்

x. இலங்கை கொடுகடன் பணியகத்தின் அறிக்கை

xi. ஏனைய தேவையான ஆவணங்கள்

### 6.1.3. தேவையான ஆவணங்கள் (பிணையாளர்கள்)

1. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட பிணையாளர் விண்ணப்பப்படிவம் மற்றும் சொத்துக்களை வெளிப்படுத்தல் படிவம்
2. தேசிய அடையாள அட்டையின் பிரதி
3. வருமானக் கூற்று (அண்மைய சம்பள உறுதிப்படுத்தல் கடிதம் / வங்கிக் கூற்று / அண்மைய சம்பளப் பட்டியல்)
4. சிட்டைகள்
5. இலங்கை கொடுகடன் தகவல் பணியக அறிக்கை
6. நிதிப்பாய்ச்சல் கூற்று
7. வருமானத்தை உறுதிப்படுத்தும் ஏனைய கூற்றுக்கள்

### 6.1.4. பாதுகாப்புத் தொடர்பான ஆவணங்கள் - அசையும் சொத்துக்கள்

i. பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி
ii. வாகனத்தின் உரிமைச் சான்றிதழ்
iii. மதிப்பீட்டு அறிக்கை
iv. விற்பனை சிட்டை
v. மேலதிக திறப்பு

## 7. பொதுவானவை

- வியாபாரத்தலத்தின் புகைப்படம் (பெயர்ப்பலகையுடன்) மற்றும் பாதுகாப்பு
- பரிசோதனை அறிக்கை
- கடன் தேவைப்பாட்டிற்கான சாட்சி

## 8. முக்கிய விதிமுறைகளும் நிபந்தனைகளும்

அ. விண்ணப்பதாரர்களுக்கு முன்னறிவிக்காது அல்லது மேர்சன்ட் பேங்க் ஒ.்.ப் ஶ்ரீலங்கா அன்ட் பைனான்ஸ் பீஎல்சி (MBSL) இற்கு தேவைப்படும் எந்த நேரத்திலும் கோரிக்கையின் பேரில் கடன் திருப்பிச் செலுத்தப்படும்.

ஆ. விண்ணப்பதாரியினால் வாகனத்தின் மீது எந்தவொரு குத்தகை, பொறுப்பு அல்லது வேறு எந்தவொரு கடப்பாடும் மேற்கொள்ளப்படாது எனவும் அல்லது செய்யப்படமாட்டாது எனவும் உறுதியுரை செய்தல் வேண்டும்.

இ. MBSL நிறுவனத்திற்கு விண்ணப்பதாரியின் வியாபாரத்தின் கணக்குப் பதிவேடுகளைப் பரிசோதிக்கும் உரிமை உண்டு.

ஈ. MBSL நிறுவன உத்தியோகத்தர்களுக்கு பணத்தை அறவிடுவதற்கு விண்ணப்பதாரியின் வியாபாரத்தலத்திற்கு அல்லது வீட்டிற்கு வந்து பார்வையிடுவதற்கு அதிகாரமுள்ளதுடன் அவ்வாறு வருகை தருவதற்கான கட்டணத்தை விண்ணப்பதாரி ஏற்றல் வேண்டும்.

உ) MBSL நிறுவனத்தினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் விதத்தில், வியாபரத்தினைப் பரிசோதிப்பதற்கு விண்ணப்பதாரியின் மற்றும் / அல்லது விண்ணப்பதாரியின் வர்த்தக நிலையம் அல்லது வீட்டிற்கு பிரவேசிக்கும் உரிமை

MBSL இற்கு உண்டு. அத்தகைய வியாபாரப் பரிசோதனையொன்றை மேற்கொள்ளும்போது உரிய விண்ணப்பதாரிக்கு மற்றும் / அல்லது விண்ணப்பதாரிகளுக்கு ஏலவே அறிவித்தோ அல்லது அறிவிக்காமலோ செல்ல முடியும்.

ஊ) இந்த வசதிகள் தொடர்பான அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடங்கிய தன்னிச்சையான கடன் ஒப்பந்தமொன்றை (Auto Loan Agreement) உரிய தரப்பினர் கையொப்பமிடல் வேண்டும் என்பதுடன் அது இந்த கடிதத்தின் கட்டாயமானதொரு பகுதியாக அமையும்.

எ) விண்ணப்பதாரி MBSL ஆல் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்திலிருந்து முழுமையான ஒரு காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அத்துடன் அந்த காப்புறுதி உரிமையை MBSLஇற்கு உரிமை மாற்றம் செய்தல் வேண்டும். மேலும், அவ்வாறு பெற்றுக்கொண்ட உரிமையை வருடாந்தம் புதுப்பித்து MBSLஇற்கு ஒப்படைத்தல் வேண்டும். இதனைச் செய்வதற்கு தவறின் MBSl நிறுவனத்திற்கு அதனைப் புதுப்பிப்பதற்கான உரிமை உண்டு. அதற்கான கட்டணங்கள் விண்ணப்பதாரியின் கடன் கணக்கிற்கு வரவு வைக்கப்படும்.

ஏ) மேலே குறிப்பிடப்பட்ட வாகனத்தின் உரிமையாளராக MBSL நிறுவனம் பதிவு செய்யப்படுவதுடன், பதிவு உரிமையை MBSL நிறுவனமானது தேவையானபோது MBSL இற்கு மாற்றலாம். விண்ணப்பதாரிக்கு வாகனத்தை தம்மிடம் வைத்துக்கொள்ளும் உரிமை உண்டெனினும், கோரிக்கை விடுத்த சந்தர்ப்பத்தில் அதனை MBSLஇற்கு ஒப்படைத்தல் வேண்டும். MBSLஇற்கு தேவைப்படுகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அல்லது இடத்திலும் வாகனத்தைப் பெற்று MBSLஇன் விருப்பின் பேரில் எந்தவொரு விதத்திலும் விற்பனை செய்தல் அல்லது அகற்றும் உரிமை MBSL இற்கு உண்டு.

## 9 <u>முடிவுறுத்தல் மற்றும் அறவிடல் - சட்டரீதியான நடைமுறை</u>

இங்கு மேலே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய MBSL நிறுவனத்தினால் இந்த சேவைகள் இடைநிறுத்தப்படும் சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரருக்கு மற்றும் / அல்லது பிணையாளருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு MBSLஇற்கு உரிமையுள்ளது. அதன்போது MBSLஇற்கு கொடுப்பனவு செய்யவேண்டியுள்ள நிலுவைத் தொகை மற்றும் முத்திரைக் கட்டணம், சட்டக் கட்டணம், மற்றும் சட்டரீதியான நடைமுறைகளுக்கு செலவிடப்பட்ட அனைத்து கட்டணங்களையும் அறவிடுவதற்கும், வழங்கப்பட்டுள்ள பிணை காப்பினை உடமை மாற்றம் செய்வதற்கும் (Foreclose) MBSL நிறுவனத்திற்கு உரிமையுண்டு.

### 9.1. **பயன்படத்தக்க சட்ட ஏற்பாடுகள்**

i. 1946ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க திருத்தப்பட்ட ஈட்டுக் கடன் சட்டம்
ii. 1982ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டம்
iii. ஒப்பந்த சட்டங்கள்

iv. இலங்கை சிவில் மற்றும் குற்றவியல் சட்டம்
v. 2009ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க பாதுகாப்பான பரிவர்த்தனைகள் சட்டம்
vi. 1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உறுதிப்பத்திரங்களைப் பதிவு செய்யும் சட்டம்
vii. 1995ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நடுவர் மன்ற சட்டம்
viii. 1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க மத்தியஸ்த சபை சட்டம்
ix. 1990ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
x. 1990ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் சட்டம்
xi. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்
xii. 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்

**10 முறைப்பாடுகளை கையாளும் நடைமுறைகள்**

எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் தமது முறைப்பாடுகளை கிழே காட்டப்பட்டுள்ள எந்தவொரு முறைமையின் ஊடாகவும் முன்வைக்கலாம்.

1. அருகிலுள்ள கிளைக்குச் சென்று கிளை முகாமையாளரிடம் தமது முறைப்பாடுகளைச் செய்யலாம்.

2. எமது வாடிக்கையாளர் சேவை துரித அழைப்பு இலக்கமான **011 - 4 711 711** ஊடாக அல்லது **info@mbslbank.com / customercare@mbslbank.com** ஆகிய மின்னஞ்சல் முகவரி ஊடாக முறைப்பாடுகளை சமர்ப்பிக்கலாம்.

3. தபால் மூலம் உங்கள் முறைப்பாடுகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**முறைப்பாடுகளைக் கையாளும் உத்தியோகத்தர் (பதில்கடமை),**

மேர்சன்ட் பேங்க் ஒ∴ப் ஸ்ரீலங்கா என்ட் / பைனான்ஸ் பீஎல்சீ
இல.28, இலங்கை வங்கி மேர்சன்ட் டவர்
சென்ட் மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 03.